திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாக அள்ளிக்கொடுத்த வாக்காளர்களுக்கும், அரியலூர் மாவட்ட மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, இந்த நேரத்தில் இம்மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியினைத் தெரிவித்து எனது உரையினை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

8. மறைந்த முன்னாள் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனின் நூற்றாண்டு விழா குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, அதற்குப் பிறகு கலைஞர், மாண்புமிகு புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் புரட்சித் தலைவர்.

திரு. துரைமுருகன்: நாங்கள் கூப்பிட்டுப் பழக்கப்பட்டதுபோல் நான் சொல்கிறேன். நீங்கள் கூப்பிட்டுப் பழக்கப்பட்டதுபோல் உங்களுக்கு சொல்லத் தோன்றுகிறது. உங்களையெல்லாம்விட எனக்கு அவர் அதிக பழக்கமானவர். எனக்கு அண்ணன். என்னுடைய வழிபாட்டுக்குரியவர். நீங்கள் அதற்காக கவலைப்பட வேண்டாம். இங்கு, அவரைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள். I am a product of M.G.R. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் இங்கு ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறேன். இதில் குறுக்கிடாதீர்கள்.

அவருக்குப் பிறகு மறைந்த நம்முடைய அம்மையார் அவர்கள் ஆகிய இப்படிப்பட்ட தலைவர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில், அவர்களுக்குப் பக்கத்தில் இருந்து அமைச்சராகப் பணியாற்றியவர்; திராவிட இயக்கத்தில் தந்தை பெரியாரின் கொள்கையையும், பேரறிஞர் அண்ணாவின் கொள்கையையும் ஏற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து திராவிட

இயக்கத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு, கடைசி மூச்சு வரையில் தமிழன், தமிழ் மொழி, திராவிட இயக்கம், கலை, இலக்கியம், பண்பாடு என்ற பேச்சுக்களை இளைஞர்கள் மத்தியில் பதிய வைத்தவர்; அவருடைய பேச்சுக்கென்றே ஒரு தனி மரியாதை உண்டு; அதனால்தான் நடமாடும் பல்கலைக்கழகம் என்று பட்டம் பெற்றவர்; அவருடைய பேச்சைக் கேட்பதற்கு தமிழ்நாட்டில், கல்லூரி மேடைகளில் மாணவர்கள் திரண்டிருந்தார்கள். மேடையிலிருந்து பார்த்தால் அது பொதுக்கூட்ட மாநாடு போன்றிருக்கும். அவருடைய பேச்சுக்கென்று ஒரு தனி நடை உண்டு. நான் 1952-1953 என்று கருதுகிறேன்; எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊரில் வந்து பேசினார். அவர் பேச்சைக் கேட்ட அன்றே நான் தி.மு.க.-காரனாகி, அவரைப்போலவே இழுத்தும், பிடித்தும் பேசிப் பழக்கப்பட்டு, பிறகு நான் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் என்னைத் திருத்தி, எனக்குத் தனி நடை அமைத்தவர் நாவலர் அவர்கள். நாவலர் நெடுஞ்செழியன் என்று முழுமையான பெயர் இருந்தாலும், மறந்தும்கூட நாங்கள் யாரும் அவரை நெடுஞ்செழியன் என்று சொன்னது கிடையாது. அறிஞர் அண்ணா அவர்கள்கூட பேசுகின்றபோது, 'எங்கே, நாவலரைக் கூப்பிடுங்கய்யா' என்றுதான் சொல்வார். சில நேரங்களில், கோபமாக இருந்தால்தான் 'எங்கே, நெடுஞ்செழியனைக் காணோம்' என்று கேட்பார் அண்ணா. ஆனால், மற்றவர்கள் அனைவரும் அவரை 'நாவலர், நாவலர்' என்றுதான் அழைப்பார்கள். செய்திக்காகச் சொல்கிறேன். மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள்கூட அவரை 'நாவலர்' என்றுதான் அழைப்பார்கள். அவ்வளவு புகழ்பெற்ற ஒரு தலைவர் அவர். கட்சிரீதியாக சில நேரங்களில் கொள்கையிலே மாறுபட்டிருக்கலாம்; ஆனால், அடிப்படை திராவிடக் கொள்கையில் மாறுபடாத ஒரு மாபெரும் தலைவர், நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மன்றத்தில் இன்று அவருக்கு நூற்றாண்டு விழா என்று சொன்னபொழுது அவரால் பேச்சாளரானவன்; அவரால் தி.மு.க.-காரனானவன்; என்னைப்போல் இன்னும் ஆயிரம் பேர் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவரைப் பார்த்து அறிஞர் அண்ணா அவர்கள், 'தம்பி வா, தலைமை தாங்க வா, உன் ஆணைக்குக் கட்டுப்படுகிறோம்' என்று சொன்னார். அதுமட்டுமல்ல; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களைப் பாடி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, 'பூட்டிய இரும்புப் பெட்டி திறக்கப்பட்டது, சிறுத்தையே வெளியே வா' என்று

சொல்கின்றபோது, ஒரு சிறுத்தைக் குட்டியே புலிக் கூண்டை விட்டு வெளியே வருவதைப்போல் இருக்கும்.

'ஆயிரம் இங்குண்டு சாதி' என்று பேசுகின்றபோதும், 'இந்திக்கு இந்நாட்டில் இடமா' என்று அவர் கேட்கின்ற கேள்விகளும், அவரது பேச்சும், நினைவும் எனக்கு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு தலைவருக்கு இன்றைக்கு நூற்றாண்டு விழா. எங்கள் கட்சியின் தலைவர் தளபதியார் அவர்கள்கூட, 'திராவிட இயக்க வரலாற்றின் தனித்த புகழ் கொண்ட தலைவர், நாவலர்' என்று அவரைப் பாராட்டி, இன்றைய முரசொலி இதழில் ஒரு Article எழுதியிருக்கிறார். எனவே, இந்த மன்றத்தில் உங்களுக்கும், எங்களுக்கும் மாறுபட்ட கருத்து இல்லாத ஒரு தலைவரின் நூற்றாண்டு விழாவில் அவருக்கென்று அரசு சார்பில் ஏதாவது சிறப்பு செய்திட வேண்டும் என்று நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். Atleast, அவை முன்னவர் அவர்களாவது நாவலர் அவர்களைப் பாராட்டி, அவருடைய புகழுக்கு மரியாதை செய்ய வேண்டும். அதுதான் நாம் அவருக்குச் செய்யும் மரியாதை. ஏனென்றால், அவர் கால் படாத இடமே இல்லை. அவரால் வளர்க்கப்பட்ட அந்த இயக்கம், அவ்வளவு பெரிய தலைவருக்குக்கூட இத்தனையாண்டு காலம் அமைச்சராக இருந்தவருக்குக்கூட, அவருடைய நூற்றாண்டு விழாவில் இந்த மன்றம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையென்றால், அவருக்கல்ல சிறுமை, இந்த மன்றத்திற்கு வந்துவிடுமே என்றுதான் நான் இதைச் சொல்கிறேன்.

பிற்பகல் 1-20

எனவே, நாவலர் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட மாபெரும் தமிழ் மேதை. என்னை தி.மு.க.-காரனாக்கிய தலைவர் அவர். நான் அண்ணா அவர்களைப் பார்ப்பதற்கு முன்னால், கலைஞர் அவர்களைப் பார்ப்பதற்கு முன்னால், 1952, 1953 ஆம் ஆண்டுகளில் அவர் எங்கள் கிராமத்திற்கு வந்தபோது ஓடிப் போய் பார்த்தவன் நான். எனவே, என் நெஞ்சில் என்றைக்கும் நிலையாக இருப்பவர். ஆகவே, இன்றைக்கும் என்னுடைய பேச்சில் தட்டுத் தடுமாறி அவருடைய வார்த்தைகள்தான் சிறப்பாகவும், செருக்காகவும் வந்து சேரும். அந்த அளவிற்கு அவர் வார்த்தைகள் இருக்கும். கூட்டத்தில் அப்படித்தான் பேசுவார். அந்தக் கூட்டத்தில் மிக ஆக்கத்தோடும், ஊக்கத்தோடும், எழுச்சியோடும், 'திராவிட நாடு கிடைக்குமா?' என்று கேட்ட காலத்தில், "அல்பேனியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், இங்கிலாந்து, ஹவாய் தீவு, மாலத்தீவு,

ஜிப்ரால்டர், மால்டா, பல்கேரியா, செக்கோஸ்லோவேக்கியா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, செர்பியா, கிரேக்க நாடு, ஹங்கேரி, ஐஸ்லாந்து, லிதுவேனியா போன்ற நாடுகள் வாழுகிறபோது, 2 இலட்சத்து 48 ஆயிரத்து 38 காடுகளையும் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணுக்கடியிலே தங்கத்தையும் பெற்று, காவேரி ஓட்டத்திலே எண்ணெய்யும் பெற்று, அகில், கருங்காலி, தேக்கு, சந்தன மரங்களையும் பெற்று, சர்.சி.பி. இராமசாமி அய்யர், லெட்சுமண சாமி முதலியார் போன்ற அறிஞர்களைப் பெற்றிருக்கின்ற நம் நாடு வாழாதா" என்று அந்தக் காலத்தில் பேசுவார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பேச்சுகளெல்லாம் இத்தனை ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்றைக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, வாழ்க நாவலர் புகழ் என்று கூறி அமைகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஆமோதிக்கிறேன். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. நேற்றுதான் இதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியிருக்கிறேன். நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் என்று எல்லோராலும் போற்றப்பெற்று, திராவிட இயக்கத்தின் ஒரு தூணாக இருந்தவர். தந்தை பெரியார் அவர்களின் காலத்திலிருந்து, அண்ணா அவர்களின் காலம், கலைஞர் அவர்களுடைய காலம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலம் என்றெல்லாம் நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்ட ஒரு மாபெரும் தலைவர். அரசின் சார்பாக அவருடைய நூற்றாண்டு விழா தனிச் சிறப்பாக, தனி விழாவாக எடுக்கப்பட்டு, அவருக்கு உரிய மரியாதை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்துதான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசினேன். உறுதியாக அவருக்குரிய மரியாதை அரசு சார்பாக தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள். அதையெல்லாம் மீறி, வரலாற்றில் அவருடைய பெயர் இடம்பெறத்தக்க வகையில், அந்த விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதையும் இந்த

நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில், நாங்கள் அவரது நினைவோடு என்றும் இருப்போம். புரட்சித் தலைவர் அவர்களுடைய காலம் வரை அவர்களுடன் உடனிருந்தவர், மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்திலும் உடனிருந்தவர். அவரது மறைவிற்குப் பின்னால், அவருடைய துணைவியார் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எல்லா வகைகளிலும் பக்கபலமாக இருந்தார்கள் என்பதையெல்லாம் நாங்கள் எங்களுடைய நெஞ்சங்களில் என்றைக்குமே நிலைநிறுத்தியிருக்கிறோம் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, அரசு சார்பாக உரிய மரியாதை அவருக்கு வழங்கப்படும். அந்த மரியாதை வரலாற்றில் இடம்பெறும் என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2019-2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 27-தொழில் துறை

(ஆ) கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

—

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். தற்போது 1 மணி 23 நிமிடம் ஆகிறது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் மொத்தம் பத்து நிமிடங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1-25

2018-2019 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 49, இந்த ஆண்டு 2019-2020 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 77-ல் சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித்தட திட்டம் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம்